Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
STC No.2015 /2022 Date: 24.09.2025
Deposition of witness for prosecution: PW 1 ஜெகதீஸ்வரன்
Defence:
Court:

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 24.09.2025 TIME 11.45 **PM**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை தொடர்ச்சி :–**

விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்ததை ஓட்டி வந்த ஓட்டுநர் ஆஜர் எதிரி தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நடந்த விபத்தில் நான் மயக்கம் அடைந்தேன் என்றால் இல்லை. கம்பத்திலிருந்து நான் வேலை பார்க்கும் நிறுவனம் மயிலாடும்பாறை 45 கி.மீ துலைவில் உள்ளது. எனது நிறுவனத்தில் நான் காலை 08.00 மணிக்கு வேலைக்கு ஆஜராக வேண்டும். விபத்து நடந்த இடம் காமாட்சிபுரம் – சீப்பாலக்கோட்டை வளைவு ஆகும். விபத்து நடந்த பின்பு அருகில் இருந்தவர்கள் என்னை தூக்கி அருகில் சாலை அருகே உள்ள பாலக்கட்டையில் படுக்க வைத்திருந்தார்கள், பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் சின்னமனூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் அச்சமயத்தில் எனது மாமாவும் வந்துவிட்டார்கள், சின்னமனூர் அரசு மருத்துவமனையிருந்து மேல்சிகிச்சைக்காக தேனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டேன். புகார் வாக்குமூலம் க.விலக்கு அரசு மருத்துவமனையில் வைத்து காலை 11.00 – 11.30 மணியளவில் கொடுத்தேன். புகார் வாக்மூலத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை எனது மச்சனன் கையெழுத்து செய்தார். புகார் வாக்குமூலத்தில் எழுதிய விபரத்தை என்னை படிக்க சொன்னார்கள். புகார்வாக்குமூலம் அளித்த போது எதிரியின் பெயர் எனக்கு தெரியும், புகார்வாக்குமூலத்தில் சொல்லவில்லை பின்னிட்டு சொல்லியுள்ளேன். காமாட்சிபுரம்– சீப்பாலக்கோட்டை சாலை குறுகிய சாலை என்றால் சரிதான். அச்சாலையில் பொதுவாக வாகனங்கள் மெதுவாக தான் செல்லும் என்றால் சரியல்ல. விபத்து நடந்த பின்பு பேருந்து சென்றுவிட்டது. அரசு மருத்துவமனையில் எத்தனை மணிக்கு விபத்து நடந்ததாக சொன்னேன் என்றால் மருத்துவர் என்னிடம் கேட்கவில்லை ஆனால் காலை 07.45 – 08.00 மணி இருக்கும்.

2) புகார்வாக்குமூலம் அளித்த பின்பு போலிசார் என்னிடம் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். நான் அளித்த வாக்குமூலத்திலோ, விசாரணையிலோ பேருந்தின் எந்த பகுதி மோதியது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியை தற்போது தான் நீதிமன்றத்ில் வைத்து பார்த்தேன் என்றால் விபத்து நடந்த இடத்தில் வைத்து பார்த்தேன். எதிரியை போலிசாரிடம் நான் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன இடத்தில் விபத்து நடக்கவில்லை என்றால்

சரியல்ல. நான் எனது பணிக்கு அவசரமாக செல்லவேண்டும் என்பதற்காக வேகமாக சென்று என்னுடைய கவனக்குறைவால் விபத்தை ஏற்படுத்திக்கொண்டடேன் என்றால் சரியல்ல. வளைவில் பேருந்து வருவதை பார்த்து வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் நானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/ P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.